## தரமான விதைகளைப் பயன்படுத்த விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்

First Published : 02 Apr 2012 01:34:22 PM IST

கும்மிடிப்பூண்டி,ஏப்.1: வேளாண்மைத் துறையினரால் மானிய விலையில் வழங்கப்படும் தரமான விதைகளைப் பயன்படுத்த விவசாயிகள் முன்வர வேண்டும் என்று கும்மிடிப்பூண்டி வேளாண்மை துறை துணை அலுவலர் சேகர் தெரிவித்தார்.

கும்மிடிப்பூண்டி அடுத்த பல்லவாடாவில் விதை கிராமத் திட்ட முகாம் அண்மையில் நடைபெற்றது. ஊராட்சி மன்றத் தலைவர் ஜே.ரமேஷ்குமார் தலைமை வகித்தார். ஒன்றிய கவுன்சிலர் முத்துசாமி முன்னிலை வகித்தார். கும்மிடிப்பூண்டி வேளாண்மை துறை துணை அலுவலர் சேகர் பேசியது:

வேளாண்மை துறை மூலம் தரமான அதிக மகசூல் தரும் விதைகள் உற்பத்தி செய்து வரும் நிலையில் பல்லவாடா மற்றும் சுற்றுப்புற பகுதியை சேர்ந்த விவசாயிகள் மாதர்பாக்கம் வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருந்து கடந்த ஆண்டில் 8 டன் விதைகளையே வாங்கியுள்ளனர்.

இதற்குக் காரணம் இந்த கிராமங்கள் ஆந்திர எல்லைப் பகுதியில் உள்ளதால் இந்த விவசாயிகள் ஆந்திராவில் விதைகளை வாங்கி விவசாயம் செய்கின்றனர். இதனால் தரமான நவீன விதைகள் மூலம் அதிக மகசூல் பெற விவசாயிகள் தவறுகின்றனர். எனவே வேளாண்மைத் துறையினரால் மானிய விலையில் வழங்கப்படும் தரமான விதைகளைப் பயன்படுத்த விவசாயிகள் முன்வர வேண்டும்.

தமிழக முதல்வர் அறிமுகம் செய்துள்ள தீவிர சாகுபடி முறையில் அதிகளவு விவசாயிகளுக்கு விதைகள், இடுபொருள்கள் வாங்க மானியம் வழங்கப்படுகிறது. விவசாயிகள் ஒரு நாத்து நடவு முறையையும், மணிலா பயிரிடுவதிலும் ஆர்வம் காட்ட வேண்டும். வேளாண்மைத் துறையால் வழங்கப்படும் உயிர் உரங்களை விவசாயத்திற்குப் பயன்படுத்த வேண்டும் என்றார்.

முகாமில் விவசாயிகளுக்கு வேளாண்மை துறை மூலம் அரசு வழங்கும் பல்வேறு மானியங்கள் குறித்து எடுத்துக் கூறப்பட்டது. வேளாண்மை துறை சார்பில் விவசாயிகளுக்கு 100 கிலோ விதைகளை, சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்ட கும்மிடிப்பூண்டி ஒன்றிய அ.தி.மு.க

செயலாளர் கோபால்நாயுடு வழங்கினார். வேளாண் உதவி அலுவலர் சிவகுமார் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**கோழி தீவனம் தயாரிக்க மத்தி கருவாடுகள் ஏற்றுமதி**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 03,2012,02:55 IST

கருத்தை பதிவு செய்ய

பரங்கிப்பேட்டை : கோழித்தீவனம் தயாரிப்பதற்காக பரங்கிப்பேட்டையில் இருந்து மத்தி கருவாடுகள் அதிக அளவில் நாமக்கல்லுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.

பரங்கிப்பேட்டை கடற்கரை கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் கடலில் பிடிக்கப்படும் வஞ்சரம், சூரை, கவலை, கெளுத்தி, பாரை, அகிலா, மத்தி உள்ளிட்ட மீன் வகைகள் ஆந்திரா உள்ளிட்ட வெளி மாநிலங்களுக்கு அதிகளவில் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.

தற்போது நாமக்கல்லில் கோழி தீவனத்திற்கு மத்தி கருவாடுகள் அதிகளவு தேவைப்படுவதால் கடந்த ஒரு வாரமாக மத்தி மீன்கள் பரங்கிப்பேட்டை அன்னங்கோவில் பகுதியில் காயவைத்து கருவாடாக்கப்பட்டு லாரி மூலம் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

**கருகுது மிளகாய்; காரம் குறைந்தது விலை கவலையில் முதுகுளத்தூர் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 03,2012,04:42 IST

முதுகுளத்தூர் : முதுகுளத்தூர் பகுதியில் போதிய தண்ணீரின்றி மிளகாய்கள் கருகி, விலையும் வீழ்ச்சியடைந்ததால், விவசாயிகள் கவலையில் உள்ளனர். கடந்தாண்டு மழைசீசனில் முதுகுளத்தூர், கமுதி, கடலாடி பகுதிகளில் போதிய மழையில்லாததால், நெல் பயிர்கள் கருகியது.

அதன்பின் பெய்த சிறுமழையை நம்பி மிளகாய் பயிரிட்டனர். தொடர்ந்து மழை பெய்யும் என்ற எதிர்பார்ப்பு பொய்த்தது. மிளகாய் பயிர்கள் கருகியது, சிறிதளவு விளைந்த மிளகாய்களுக்கும் உரிய விலையில்லை.

முதுகுளத்தூர் தாலுகா விவசாயிகள் சங்க தலைவர் சண்முகவேலு கூறியதாவது: கடந்த ஜனவரியில் மிளகாய் விலை கிலோ 120 வரை இருந்தது.

தற்போது கிலோ ரூ 45 க்கு விற்பனையாகிறது. கஷ்டப்பட்டு விவசாயம் செய்தாலும், வருவாய் இல்லை.

கவலையில் ஆழ்ந்துள்ள விவசாயிகளுக்கு ஆர்வம் குன்றி வருகிறது.

விவசாயத்தை மேம்படுத்த இப்பகுதிகளுக்கு பிரதான ஆற்றுப்படுகைகளிலிருந்து நீர் வரத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டும், என்றார்.

## விதை சுத்திகரிப்பு உபகரண ரூ.16.08 லட்சம் மானியம்

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 03,2012,03:35 IST

திருநெல்வேலி : தனியார் விதை சுத்திகரிப்பு மையங்கள் அமைக்க 16.08 லட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டது.

நெல்லை கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது. இதில் தேசிய வேளாமை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் புளியங்குடியை சேர்ந்த பெருமாளுக்கு 15.48 லட்சம், சிவலார்குளத்தை சேர்ந்த கருப்பசாமிக்கு 8.55 லட்சம், வெள்ளங்குளியை சேர்ந்த மீரான் பண்ணையாருக்கு 17.92 லட்சம் உட்பட மொத்தம் 41.95 லட்சம் மதிப்பிலான விதை சுத்திகரிப்பு உபகரணங்களுக்கு அரசு மானியமான 16.08 லட்சம் ரூபாயை கலெக்டர் செல்வராஜ் வழங்கினார்.

மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் தேவசகாயம், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) பாலசுப்பிரமணியன், வேளாண்மை துணை இயக்குனர் (பொறுப்பு) விஜயகுமார், பி.ஆர்.ஓ மதிமாறன், ஏ.பி.ஆர்.ஓக்கள் நவாஸ்கான், சுரேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

தினகரன்

## தேங்காய் கொள்முதல் விலை வீழ்ச்சி: விவசாயிகள் கவலை

பதிவு செய்த நேரம்:2012-04-02 13:06:04

வத்திராயிருப்பு: தேங்காய் கொள்முதல் விலை ரூ.2.80 ஆக வீழ்ச்சியடைந்ததால் வத்திராயிருப்பு பகுதி தென்னை விவசாயிகள் கடும் நஷ்டம் அடைந்துள்ளனர். அரசே நேரடி கொள்முதல் செய்ய மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்றனர்.

வத்திராயிருப்பு, புதுப்பட்டி, கூமாப்பட்டி, கான்சாபுரம், பிளவக்கல் அணை, வண்டிப்பண்ணை மலையடிவாரம், மகாராஜபுரம் உள்ளிட்ட பகுதிகளில் 9 ஆயிரம் ஏக்கரில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் வெட்டப்படும் தேங்காய்கள், வத்திராயிருப்பு பகுதிகளில் உள்ள 40 தேங்காய் பேட்டைகளுக்கு கொண்டு வரப்படுகின்றன. இங்கு பிரித்தெடுக்கப்பட்டு விற்பனைக்காக ராஜஸ்தான், குஜராத், மத்தியபிரதேசம் போன்ற வெளி மாநிலங்களுக்கும், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கும் தேங்காய்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன.

தற்போது தோப்புகளில் தேங்காய் வெட்டும் பணி நடந்து வருகிறது. ஆனால் கொள்முதல் விலை வீழ்ச்சியடைந்ததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ள

னர்.

விவசாயி கந்தசாமி கூறுகையில், நன்றாக தண்ணீர் பாய்ச்சினால் வருடத்திற்கு 8 முதல் 10 முறை மரத்திலிருந்து தேங்காய் வெட்டி எடுக்கலாம். பல மாதங்களாக தொடரும் மின்வெட்டு காரணமாக தென்னந்தோப்புகளுக்கு சரியாக தண்ணீர் பாய்ச்சமுடியவில்லை. இதனால் விளைச்சல் எதிர்பார்த்த அளவு இல்லை. இது ஒருபுறமிருக்க, சில நாட்களுக்கு முன் ரூ.3.20க்கு விற்பனையான உரிக்காத தேங்காய் தற்போது ரூ.2.80க்கு விற்பனையாகிறது. இதனால் விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே விவசாயிகளிடம் இருந்து அரசே நேரடியாக தேங்காய்களை கொள்முதல் செய்ய வேண்டும்என்றார்.

தேங்காய் வியாபாரி கண்ணன் கூறுகையில், தேங்காய் விலை வீழ்ச்சி அடைந்தபோதும் முன்பெல்லாம் தேங்காய் மட்டை எங்களுக்கு கை கொடுக்கும். ஒரு லோடு ரூ.6 ஆயிரத்திற்கு விற்பனையாகும்.

மின்வெட்டு காரணமாக கயிறு உற்பத்தி தொழில் பாதித்துள்ளதால், தற்போது ஒரு லோடு தேங்காய் மட்டையை ரூ.1500க்கு கூட வாங்க ஆள் இல்லை. விவசாயிகளிடம் இருந்து 100க்கு 15 தேங்காய் இலவசமாக கொள்முதல் செய்த போதிலும் உரிய விலை கிடைக்காததால் எங்களுக்கும் பெரும் நஷ்டம் ஏற்படும் நிலை உள்ளது என்றார்.

தினத் தந்தி
DAILY THANTHI

## மேட்டுப்பாளையம் மார்க்கெட்டில் வெள்ளைப்பூண்டு விலை கடும் வீழ்ச்சி விவசாயிகள் கவலை



மேட்டுப்பாளையம் மார்க்கெட்டில் குவித்து வைக்கப்பட்டு உள்ள வெள்ளைப்பூண்டு மூடைகளை படத்தில் காணலாம்.

மேட்டுப்பாளையம், ஏப்.3–

மேட்டுப்பாளையம் மார்க்கெட்டில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு வெள்ளைப்பூண்டு விலை கடும் வீழ்ச்சி அடைந்து உள்ளது. இதனால் வெள்ளைப்பூண்டு விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்கு உள்ளாகி கவலை அடைந்து உள்ளனர்.

வரத்து அதிகம்

மேட்டுப்பாளையம் மார்க்கெட்டில் உள்ள வெள்ளைப்பூண்டு மண்டிகளுக்கு நீலகிரி மாவட்டம் மற்றும் கர்நாடக மாநிலத்தில் இருந்து வெள்ளைப்பூண்டு வந்து கொண்டிருக்கின்றது. வெள்ளைப்பூண்டு மண்டிகளில் பிரதிவாரம் ஞாயிற்றுக்கிழமை மட்டும் ஏலம் நடைபெற்று கொண்டு இருக்கின்றது.

மேட்டுப்பாளையம் மார்க்கெட்டில் இருந்து வெள்ளைப்பூண்டு கோவை, திருப்பூர், ஈரோடு, சேலம் மற்றும் உள்ளூர் மார்க்கெட்டுக்கு சென்று கொண்டு இருக்கின்றன.

நீலகிரி மாவட்டத்தில் வெள்ளைப்பூண்டு சீசன் தொடங்கியதில் இருந்து மேட்டுப்பாளையம் மார்க்கெட்டிற்கு வெள்ளைப்பூண்டு வரத்து அதிகரித்து காணப்பட்டது. வரத்து அதிகமானதால்

*வரலாறு காணாத அளவிற்கு வெள்ளைப்பூண்டு விலை கடும் வீழ்ச்சி அடைந்திருந்தது.*

*விலை வீழ்ச்சி*

*மேட்டுப்பாளையம் மார்க்கெட்டுக்கு நேற்று முன்தினம் நீலகிரி மாவட்டம் மற்றும் கர்நாடக மாநிலத்தில் இருந்து சுமார் 10 ஆயிரம் மூடைகள் வந்திருந்தது. நீலகிரி வெள்ளைப்பூண்டு ஒரு கிலோ ரூ.28–ல் இருந்து ரூ.29 வரையும், கர்நாடக பூண்டு ஒரு கிலோ ரூ.10ல் இருந்து ரூ.26 வரையும் விற்பனை ஆனது.*

*வரத்து அதிகமானதால் வெள்ளைப்பூண்டு விலை கடும் வீழ்ச்சி அடைந்து காணப்பட்டது. கடந்த ஒரு மாத காலமாகவே இந்த விலை வீழ்ச்சி காணப்பட்டது. வெள்ளைப்பூண்டுக்கு நல்ல விலை கிடைக்காததால் விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்கு உள்ளாகி கவலை அடைந்து உள்ளனர்.*

*இது பற்றி நீலகிரி மாவட்ட வெள்ளைப்பூண்டு விவசாயி கே.ரங்கசாமி(50) என்பவர் கூறியதாவது:–*

*பெரும் நஷ்டம்*

*கடந்த 30 ஆண்டுகளாக வெள்ளைப்பூண்டு விவசாயம் செய்து வருகின்றேன். கடந்த ஆண்டு இதே சீசனில் வெள்ளைப்பூண்டு ஒரு கிலோ ரூ.120ல் இருந்து ரூ.180 வரை விற்பனை ஆனது.*

*கடந்த ஆண்டு கிடைத்த விலையை மனதில் நினைத்து விவசாயிகள் மற்ற பயிர்கள் விவசாயம் செய்வதை விட்டுவிட்டு வெள்ளைப்பூண்டு விவசாயத்தை தொடங்கி விட்டதால் இந்த அண்டு வரத்து அதிகரித்து, நல்ல விலை கிடைக்காமல் கடும் வீழ்ச்சி அடைந்து விட்டது.*

*இதனால் இந்த ஆண்டு வெள்ளைப்பூண்டு விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டு உள்ளது. இவ்வாறு கே.ரங்கசாமி கூறினார்.*

## *அரசு தோட்டக்கலை பண்ணைகளில் செடிகள், நாற்றுகள் விற்பனைக்கு தயார் இணை இயக்குனர் தகவல்*

*ஊட்டி, ஏப்.3–*

*நீலகிரி மாவட்ட அரசு தோட்டக்கலை துறை பண்ணைகளில் தரமான நாற்றுகள், செடிகள் விற்பனைக்கு தயாராக உள்ளதாக இணை இயக்குனர் ஹால் தொரை தெரிவித்து உள்ளார்.*

*கல்லார், பர்லியார்*

*நீலகிரி மாவட்ட தோட்டக் கலை துறை இணை இயக்குனர் ஜோ.ஹால்தொரை விடுத்து உள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டு உள்ளதாவது:–*

*நீலகிரி மாவட்டத்தில் உள்ள தோட்டக்கலை பண்ணைகள், பூங்காக்களில் உற்பத்தி செய்யப்படும் தரமான செடிகள், விதைகள் இருப்பில் உள்ளது. விவசாயி கள் சம்பந்தப்பட்ட பண்ணை மேலாளரை அணுகி நாற்றுக் களை பெற்று பயன் அடையலாம்.*

*கல்லார் அரசு தோட்டக் கலைப்பண்ணையில் தரமான மிளகு நாற்றுகள், அலங்கார செடிகள்,*

சில்வர் ஓக் நாற்றுகளும், பர்லியார் அரசு தோட்டக்கலை பண்ணையில் தரமான கிராம்பு, துரியன், குரோட்டன்ஸ், சில்வர் ஓக் நாற்றுகள் விற்பனைக்கு தயாராக உள்ளது.

அலங்கார செடிகள்

தும்மனட்டி, கோல் கிரைன், நஞ்சநாடு, காட்டேரி ஆகிய அரசு தோட்டக்கலை பண்ணைகளில் தேயிலை நாற்றுகளும், குன்னூர் அரசு பழம் பதனிடும் நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட ஜாம், ஜெல்லி, பழரசம் மற்றும் ஊறுகாய் ஆகியவை விற்பனைக்கு உள்ளது.

குன்னூர் சிம்ஸ் பூங்காவில் மரக்கன்றுகள், அலங்கார செடிகள், மலர் செடிகள் ஆகியவை தயாராக உள்ளது. ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் ரோஜா செடிகள், அழகு தாவரங்கள், மலர் விதைகள் தயாராக உள்ளது.

ரோஜா

ஊட்டி அரசு ரோஜா பூங்காவில் ரோஜா கன்றுகள், அலங்கார செடிகளும், கூடலூர், தேவாலா அரசு தோட்டக்கலைப்பண்ணை களில் தரமான தேயிலை நாற்றுகள், சில்வர் ஓக், காப்பி, மிளகு நாற்றுகளும் விற் பனைக்கு தயாராக உள்ளது. விவசாயிகள் தோட்டக்கலை துறை பண்ணை களில் உள்ள தரமான நாற்றுகள் பெற்று வரும் பருவ மழை காலங்களில் தங்களது நிலங்களில் நடவு செய்யுமாறு கேட்டு கொள்ளப் படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

## பூத்துக் குலுங்கும் சூரியகாந்தி மலர்கள்



கோடை காலத்தில் சூரியகாந்தி பூக்கள் பூக்க தொடங்கும். அந்த வகையில் கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் உள்ள வயல் வெளியில் பூத்துக் குலுங்கும் சூரியகாந்தி மலர்களை படத்தில் காணலாம்.

நல்ல விலை கிடைப்பதால்

# பீன்ஸ் அறுவடையில் தீவிரம் காட்டும் விவசாயிகள்

கொலக்கம்பை, ஏப்.3-

கொலக்கம்பை பகுதியில் உள்ள விவசாயிகள் பீன்ஸ் அறுவடையில் தீவிரம் காட்டி வருகின்றனர். நல்ல விலை கிடைப்பதால் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

### காய்கறிகள்

நீலகிரி மாவட்டத்தில் பச்சை தேயிலை விலை வீழ்ச்சிக்கு பின் விவசாயிகள் பீன்ஸ், கேரட், கோஸ், உருளைக்கிழங்கு, பீட்ரூட், முள்ளங்கி உள்ளிட்ட மலை தோட்ட காய்கறிகளை பயிரிட ஆரம்பித்தனர். இந்த காய்கறி களை அறுவடை செய்து மேட்டுப்பாளையம், ஊட்டி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள காய்கறி மண்டிகளுக்கு எடுத்து சென்று விற்பனை செய்து வருகின்றனர்.

நீலகிரி மாவட்டத்தில் விளையும் காய்கறிகளுக்கு தமிழகம் மட்டுமல்லாமல் வெளி மாநிலங்களிலும் நல்ல வரவேற்பு உள்ளது. இதனால் வியாபாரிகள் நீலகிரி மாவட்டத்தில் விளையும் காய்கறிகளை நேரடியாகவும், மண்டிகள் மூலமாகவும் கொள்முதல் செய்து வருகின்ற னர்.



### அறுவடை

இந்த நிலையில் கொலக்கம்பை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளான தூதூர்மட்டம், கிளிஞ்சடா, டெராமியா, சட்டன், கரும்பாலம், அதிகரட்டி உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் அதிகளவு வசித்து வருகின்றனர். விவசாயிகள் தங்களது நிலங்களில் மாவட்டத்தில் நிலவும் தட்ப வெப்ப நிலை மற்றும் மண்ணின் தன்மைக்கேற்ப நன்கு மகசூல் தரும் பீன்ஸ் பயிர்களை விவசாயம் செய்துள்ளனர்.

இங்கு வாட்டக்ஸ், புஷ், பாம்பே உள்ளிட்ட வகைகளை சேர்ந்த பீன்ஸ் பயிர்களை விவசாயிகள் அதிகளவு பயிர் செய்துள்ளனர். இதில் வாட்டக்ஸ் வகை பீன்ஸ் தற்போது அறுவடைக்கு தயாராகி உள்ளது. பெரும்பாலான விவசாயிகள் இதனை அறுவடை செய்து மேட்டுப்பாளையம் மொத்த காய்கறி மண்டிக்கு கொண்டு சென்று விற்பனை செய்து வருகின்றனர்.

### வியாபாரிகள்

வெளி மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களில் இருந்து சில வியாபாரிகள் கிலோ ஒன்றுக்கு ரூ.30 முதல் ரூ.42 வரை விலை கொடுத்து மொத்தமாக அறுவடை செய்யப்படும் இடங்களில் வாங்கி செல்கின்றனர். இதனால் விவசாயி களுக்கு மேட்டுப் பாளையம் கொண்டு செல்ல வேண்டிய செலவு மிச்சமாகிறது என்று தெரிவித்து உள்ளனர். இந்த வருடத்தில் முதலாவதாக அறுவடை செய்யப்பட்ட இந்த பீன்ஸ்களுக்கு உரிய விலை கிடைத்துள்ளதால் விவசாயிகள் பெரிதும் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். மேலும் இந்த விலை கேரள மாநிலத்தில் சித்திரைக்கனி பண்டிகை வரை நீடிக்கும் என்பதால் தங்களது நிலங் களில் பயிரிடப்பட்டு உள்ள பீன்சை அறுவடை செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.